DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

C.C.No. -163/2025

Prosecution PW -1

| | | |
|---|---|---|
| Name | திரு.குமார் | Occupation |
| Husband/Father Name | | Village |
| Taluk | | Age |
| Date | 26.02.2026 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused present.

முதல் விசாரணை

நான் சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை தாலுகா காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.05.2022ம் தேதி நான் நாகப்பட்டிணம் போதைப்பொருள் நுண்ணறிவு பிரிவில் தலைமைக் காவலராகப் பணியிலிருந்தபோது, காவல் ஆய்வாளர் ராஜேஷ் அவர்களுக்கு தகவலாளி போன் மூலம் மயிலாடுதுறை, காவேரி நகர் இரயில்வே பாலம் அருகே ஒரு நபர் காலை மாலை இரு வேளைகளில் கஞ்சா எனும் போதைப்பொருளை விற்று வருவதாக கூறிய தகவலை பெற்று காவல் துணைகண்காணிப்பாளருக்கு தெரிவித்து பொதுநாட்குறிப்பில் பதிவு செய்து ரெய்டுக்கு தேவையான உபகரணங்களுடன் என்னையும், தலைமைக்காவலர்கள் முருகவேல், செந்தில்குமார் ஆகியோருடன் சம்பவ இடம் சென்று தகவலாளி காட்டிய ஒரு நபரை ஆய்வாளர் அவருடைய பெயர் முகவரியை விசாரிக்க அவர் தன் பெயர் லோகேஷ் என்று பெயர் விலாசத்துடன் கூறினார். பின்னர் ஆய்வாளர் அவரிடம் நீங்கள் கஞ்சா வைத்திருப்பதாக தகவல் வந்துள்ளது உங்களை சோதனை செய்ய வேண்டும் அவ்வாறு சோதனை செய்ய நீதித்துறை நடுவர் முன்போ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் முன்போ சோதனை செய்து கொள்ள உரிமை உள்ளது என்று கூறியபோது, அதற்கு அவர் அவ்வாறு தேவையில்லை நீங்கள் NIBCID ஆய்வாளர் என்பது தெரியும் நீங்களே சோதனை செய்யலாம் என்று கூறினார். அதை ஆய்வாளர் எழுத்து மூலம் பதிவு செய்து சோதனை சம்மத கடிதத்தை எதிரிக்கு சார்வு செய்தார். அதில் நானும், முருகவேலும் சாட்சி கையொபபம் செய்தோம், அந்த சோதனை அறிவிப்பு சம்மத

கடிதம் அதசாஆ.**1**. பின்னர் எதிரி வைத்திருந்த வெள்ளை நிற பையை சோதனை செய்த போது அதில் காயந்த நிலையில் இலை,பூ,மொட்டு ஆகியவற்றுடன் கூடிய தாவரப்பொருளுடன் கூடிய கஞ்சா இருந்தது. அதை நாங்கள் கொண்டு சென்ற தராசில் எடைபோட்டுப் பார்க்க 1.400 கிலோ இருந்தது. எதிரி கஞ்சா வைத்திருந்த குற்ற காரணம் கூறி, ஆய்வாளர் கைது நமுனா தயார் செய்து எதிரியை கைது செய்தார். அந்த கைது நமுனாவில் நானும், முருகவேலும் சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த கைது நமுனா அதசாஆ.2. பின்னர் எதிரி வைத்திருந்த கஞ்சாவிலிருந்து மாதிரிக்காகவும் பகுப்பாய்விற்காகவும் இரண்டு 50 கிராம் வீதம் கஞ்சாவை எடுத்து பாலிதீன் கவரில் போட்டு, காக்கி கவரில் மடித்து நூலால் கட்டி, SHO சீல் வைத்தார். அதில் எதிரியிடமுமம எங்களிடமும் ஆய்வாளர் கையொப்பம் பெற்றும் தானும் கையொபபம் செய்தார். மீதமுள்ள கஞ்சாவை அதே பாலிதின் பையில் போட்டு காக்கி கவரில் மடித்து நூலால் கட்டி SHO சீல் வைத்தார். அதில் எதிரியிடமும எங்களிடமும் ஆய்வாளர் கையொப்பம் பெற்றும் தானும் கையொபபம் செய்தார். எதிரியை விசாரிக்க எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை ஆய்வாளர் என் முன்பாகவும், முருகவேல் முன்பாகவும் பதிவு செய்தார். சாட்சிகளாக நானும் முருகவேலும் கையொப்பம் செய்தோம், ஆய்வாளரும் எதிரியும் கையொப்பம் செய்தார்கள். சாட்சிகளாக நானும் நரசிம்மபாரதியும் கையொப்பம் செய்தோம், ஆய்வாளரும் எதிரியும் கையொப்பம் செய்தார்கள். அந்த கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். கைப்பற்றுதல் மகசர் அ.த.சாஆ-**3**. ஆய்வாளர் 11.00 மணிக்கு சம்பவ இடத்தை என் முன்பாகவும் முருகவேல் முன்பாகவும் பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்தார். பார்வை மகசர் அ.த.சா.ஆ-**4**. பின்னர், 13.30 மணிக்கு எதிரி மற்றும் தடயத்துடன் நிலையம் வந்து ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார், அதற்கு நான் உதவியாக இருந்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை எதிரி தரப்பில்</u>

சம்பவ இடத்தில் தயார் செய்த பார்வை மகசரில் குற்ற எண், சட்டபிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரதான். கைப்பற்றுதல் மகசரில் வெள்ளை நிற சாக்கு என குறிப்பிட்ப்பட்டுள்ளது. சோதனை சம்மத கடிதம், கைது குறிப்பாணை, ஒப்புதல் வாக்கு்முலம், கைப்பற்றுதல் மகசர் ஆகியவற்றை ஆய்வாளர் தான் எழுதினார்.சொன்ன நேரம் நாள் எந்த தகவலும் வரவில்லை என்றாலும், எதிரியை கைது செய்யவில்லை

என்றாலும், எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், எந்த தடய பொருளும் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. அனைத்து ஆவணங்களும் தடய பொருட்களும் காவல் நிலையத்தில் பின்னிட்டு தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. ஆய்வாளர் போட்ட புள்ளிவிவர கணக்கிற்கு எற்றாற் போல் முதல் விசாரணையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும் சாட்சிக்குப் படித்து
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்
கொள்ளப்பட்டது.

ஒம்/-...ஜி.சுந்தரராஜன்,
கூடுதல் மாவட்ட (ம) அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்